**செய்தி வெளியீடு எண்: 162** **நாள்: 04.03.2018**

## செய்தி வெளியீடு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்கள், கர்நாடக அரசின், நாகர்ஹோளே புலிகள் காப்பகத்தின் வனப்பாதுகாவலர் மற்றும் இயக்குநராகப் பணியாற்றி வந்த திரு. மணிகண்டன், இ,வ,ப,., அவர்கள் 3.3.2018 அன்று உயிரிழந்ததையடுத்து அவருடைய மனைவி திருமதி M.சங்கீதா அவர்களுக்கு அனுப்பிய இரங்கல் கடிதத்தின் விவரம் பின் பின்வருமாறு:–

“தேனி மாவட்டம், கம்பத்தைச் சேர்ந்தவரும், கர்நாடக அரசின், நாகர்ஹோளே புலிகள் காப்பகத்தின் வனப்பாதுகாவலர் மற்றும் இயக்குநராகப் பணியாற்றி வந்த திரு. மணிகண்டன் அவர்கள் 3.3.2018 அன்று பணியில் ஈடுபட்டிருந்த போது, காட்டுயானை தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் துயரம் அடைந்தேன்.

திரு. மணிகண்டன் அவர்களை இழந்து வாடும் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தார் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தினால் ஈடுசெய்ய முடியாத இழப்பு தங்களுக்கு ஏற்பட்டுள்ள போதிலும், இந்தத் துயரத்தை தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தியையும், தைரியத்தையும் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும் அளிக்க வேண்டும் என்றும், திரு. மணிகண்டன் அவர்களின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாறவும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.”

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை 600 009**

**நாள்: 4.3.2018**